# பூசலார் நாயனாரின் தன்னம்பிக்கையும் யோகநிலையும்



முனைவர் ம. சித்ரகலா,

உதவிப் பேராசிரியர்,

என்.ஜி.எம் கல்லூரி, பொள்ளாச்சி.

அலைபேசி. 9842250753

**ஆய்வுச்சுருக்கம்**

பூசலார் நாயனாரின் தன்னம்பிக்கையும் யோகநிலையும் என்ற தலைப்பிலான ஆய்வுக் கட்டுரையில் முன்னுரை இறை ஆசை நெறி, குறிக்கோள் நெறி, தன்னம்பிக்கை நெறி, மனம் சீர் அமைப்பு நெறி, யோக நெறி, ஈகை நெறி, உறுதிப்பாட்டு நெறி ஆகிய துணைத்தலைப்புகளில் இக்கட்டுரை ஆராயப்பட்டுள்ளது. மேலும் இக்;கட்டுரையின் நிறைவாக தொகுப்புரை வழங்கப்பட்டுள்ளது

**முன்னுரை**

யானையின் பலம் தும்பிக்கையில் இருப்பதுபோல மனிதனின் பலம் நம்பிக்கையில் உள்ளது. தன்னம்பிக்கையோடு செய்யும் காரியம் வெற்றியடையும் என்பதை “உறுதி கொண்டவர்கள் தாழ்ந்ததாகச் சரித்திரம் இல்லை உயர்ந்து விளங்கினார்கள் என்பதற்கு மட்டுமே சான்று உண்டு” என்கிறார் தமிழ்வாணன். அதுபோல மனம் இருந்தால் பணம் தேவையில்லை. அன்பிருந்தால் அருளை நாடிச்செல்ல வேண்டியதில்லை. அருளாளனான இறைவனே நம்மிடம் வருவார். இறைவன் நம்மிடம் வரவேண்டுமானால் தன்னம்பிக்கையோடு கூடிய தியான நிலை வேண்டும். தியானநிலை மனிதனைப் பக்குவப்படுத்துவது. மனிதன் பக்குவப்படும்போது மனம் ஒரு நிலைப்படும். மனம் ஒருநிலைப்படும்போது செய்ய வேண்டிய காரியங்கள் தெளிவுபடும். தெளிவு காரிய சித்தியைக் கொடுக்கும். காரிய சித்தியின் பயனால் உலகம் வியக்கும். உலகத்தின் வியப்பின் உச்சம் அழியாமுத்திரையாகவும் வரலாறாகவும் உருப்;பெறும். அவ்வகையில் பூசலாரின் அன்புநிலை மிகைப்பாடு வரலாறு ஆனதையும்; வழி இல்லை என்று வலியோடு ஏங்குபவர்களுக்குத் தன்னம்பிக்கை வழியையும், பணமட்டுமே சாதனைக்கு வழியல்ல; உண்மையான தன்னம்பி;க்கையுடன் கூடிய் யோகநிலையும் சாதனைக்கு வழி என்பதை நிரூபித்துக்காட்டியவர் பூசலார். அவ்வகையில் பூசலார் நாயனாரின் தன்னம்பிக்கையையும்

யோகநிலையில் இறைவனை அடைந்த பக்குவநிலையையும் ஆய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**இறை ஆசை நெறி**

இறைவன் மீது ஏற்பட்ட ஆசையால், காதலால் அன்பினால் ஏற்பட்ட நெறி இறை ஆசை நெறி எனலாம். நியாயமான ஆசையை அடைய தன்னால் எது முடியுமோ அதை முழுமனதுடனும் விடாமுயற்சியுடனும் செய்;தது சாதனைக்கு வழிவகுக்கும். தற்கால மக்கள் படுத்துக்கொண்டே நிலவைப் பிடிக்க நினைப்பதுவும், பணத்தாசையால் பேயாவதும், பொருளாசையால் புலம்பித் தவிப்பதுமாக இருப்பதால் மன அழுத்தம் ஏற்பட்டு மன அழுத்தத்தால் சிந்தைமாறி (பைத்தியம்) போவதும் கண்கூடு. மேலும் பணம் இருக்கும் மனிதனிடம் கொடுக்க மனமிருக்காது. வளம் இருக்கும் மனிதனிடம் நல் வழங்கல் இருக்காது. இவர்கள் மனஅமைதிக்காக இறைவனைத் தேடுவதும், காணிக்கை செலுத்துவதும், கேளிக்கை செய்வதுமாக அழைவர். ஆனால் அவர்களுக்குத் தெரியாது இறைவன் அவருள்ளேயே குடிகொண்டிருக்கிறான் என்றும் அவனை (இறைவனை) அடைய தன்னம்பிக்கையுடன் கூடிய உண்மையான தியானமே செம்மையானவழி என்பதையும் அறியா முடர்களாக இருப்பர்.

இறைவனை உணர்ந்த திருமூலர் உள்ளத்தைக் கோயிலாகவும் ஊனுடம்பை ஆலயமாகவும் கூறுவதை,

“உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்

வள்ளற் பிரானுக்கு வாய் கோபுரவாயில்

தெள;ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்

கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே”

என்கிறார். தாயுமானசுவாமிகள்,

“நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம் அன்பே

மஞ்சனநீர் பூசைகொள்ள வாராய் பராபரமே” என்கிறார். இவ்வகையில் வந்த பூசலாரோ இறைவன் மேல் கொண்ட அன்புமிகு ஆசையால் கோயில் எழுப்ப எண்ணினார். எண்ணத்தால் கோயில் அமைத்தார். அக்கோயிலுக்கு இறைவனும் வந்தருளினார் என்பதை,

“என்னையோர் பொருளாகக் கொண்டே எம்பிரான் அருள்செய் தாரேல் (பூ. நா.பு. 4185)

என்ற வரிகளின்வழி உண்மையான மனதோடு முயலும் முயற்சி வெற்றி அடையும் என்பது போல இறைவன்மேல் கொண்ட நியாயமான மற்றும் உண்மையான ஆசை நிச்சயமாக நிறைவேறும் என்பதற்குப் பூசலாரின் இறை ஆசை நெறி சான்று பகர்கின்றது.

**குறிக்கோள் நெறி**

ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கைக்கும் குறிக்கோள் மிகவும் இன்றியமையாதது. குறிக்கோள் இல்லா வாழ்க்கை துடுப்பில்லா படகு போன்றது. குறிக்கோள் என்ற சொல்லை ஆங்கிலத்தில் 'யுiஅ' என்று குறிப்பிடுவர். குறிக்கோள் என்பது குறிப்பாக ஒன்றை நினைத்து அதனையே அடைதல் என்று பொருள் கொள்ளலாம். எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்ற விலங்கு நிலையில் இல்லாமல் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற உயரிய மனிதனின் வாழ்வியல் நெறியை நிர்ணயிப்பது குறிக்கோள் நெறியாகும். ஒரு செயலை செய்யவும், அச்செயலையே தொடர்ந்து மனதின் நினைத்து, மனதை ஒருமைப்படுத்தி, ஐம்புலன்களையும் அச்செயலுக்காகவே ஒன்றுபடுத்தி, ஒரு செயலைச் செய்யும் மனிதன் கர்மயோகியாகிறான். குறிக்கோளை அடைய தன்னுடைய அகக்கண் கொண்டு தன் ஐம்புலன்களையும் அடக்குவனுடைய மனம் சாந்தமடையும் என்பதை,

"பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு

மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன

மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினால்

பார்ப்பான் பசுஐந்தும் பாலாய்ச் சொரியுமே"

என்று திருமூலர் ஐம்பொறி ஆட்சி வெற்றி நல்கும் என்;;;;;;று குறிப்பிடுகின்றார். ஐம்புலன்களையும் அடங்காமல் திரிகிற மனித வாழ்க்கை அழிவிற்கு வழிவகுக்கும் என்பதை,

"புலனைந்தும் பெறிகலங்கி நெறி மயங்கி

அறிவழிந்திட் டைம்மே லுந்தி

அலமந்த போதாக அஞ்சேலென்

றருள் செய்வான்"

என்ற தேவாரப்பாடலின்வழி புலனைந்தும் கலக்கம் ஏற்பட்டு ஒருநிலைபடா நிலையில் குறிக்கோளும் இருக்காது, நல்நெறியும் அழியும் என்;பதையும் இப்பாடல் நுட்பமாகச் சுட்டிக்காட்டி நிற்கின்றது.

ஆக ஐம்புலன் அடக்கத்தினால் மனம் ஒன்றுபடும். மனம் ஒன்றுபட்டால் குறிக்கோளை அடைய முடியும் என்பதை ஆய்ந்து உணரமுடிகின்றது. இவ்வகையில் பூசலார் நாயனார் இறைவனுக்குயக் கோயில் எழுப்ப எண்ணினார். எண்ணத்தை மனதில் விதைத்தார். மனதினாலேயே ஆக்கப்பணிகளைச் செய்தார் என்பதை,

"அன்றினார் புரமெரித்தார்க் காலயம் எடுக்க எண்ணி

ஒன்றும் அங்குதவாதாக உணர்வினால் எடுக்குத் தன்மை

நன்றென மனத்தினாலே நல்லஆ லயந்தான் செய்த" (பா. 4171)

என்ற பாடல்வரிகளின்வழி அறியமுடிகின்றது. ஆக ஐம்புலன் அடக்கமும் மனஒருமைப்பாடும் குறிக்கோளை அடைய சிறந்தவழி என்பதை நிரூபித்துக்காண்பித்து வரலாறு படைத்தவர் பூசலார் நாயனார் என்பதில் ஐயமில்லை.

**தன்னம்பிக்கை நெறி**

தன்னம்பிக்கை (ளூநடக ஊழகெனைநnஉந) என்பது தன்னால் ஒரு குறிப்பிட்ட செயலை வெற்றிகரமாகச் செய்து முடிக்க முடியும் என்;று மனதில் நம்பிக்கை கொள்வது. மனதின் நம்பிக்கையே வாழ்க்கையை நல்வழியில் அழைத்துச் செல்லும் அரும்மருந்து. அவ்வகையில் நம்பிக்கையோடு மனதில் இறைவனை நினைத்து,

“நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம் அன்பே

மஞ்சனநீர் பூசைகொள்ள வாராய் பராபரமே”

என்றார் தாயுமானவர். இவரின் வாக்கினைப்போல சிவபெருமானுக்காக பூசலார் மனதிலேயே கோயில் எழுப்ப எண்ணினார். நம்பிக்கையோடு ஆதி முதல் அந்தம் வரை கோயில் எழுப்ப செய்யவேண்டிய காரியங்களை ஆகமமுறைப்படி செவ்வனே செப்பனிட்டார். இறைவன் மனக்கோயிலுக்கு வருவார் என்ற நம்பிக்கையில் மனதில் கோயில் எழுப்பினார் போலும். அந்த நம்பிக்கை வீண்போகவில்லை. காடவர் பெருமானான பல்லவ அரசன் காஞ்சி நகரத்தில் பெருஞ்செல்வ செழிப்புடன் கற்கோயில்; எடுத்ததை,

“காடவர் கோமான் கச்சிற் கற்றளி எடுத்துமுற்ற

மாடெலாஞ் சிவனுக் காகப் பெருஞ்செல்வம் வகுத்தல் செய்வான்” (பூ. நா.பு. 4179)

இப்பாடல்வரி எடுத்தியம்புகின்றது. பல்லவ மன்னன் பெருஞ்செல்வத்துடன் கட்டிய கோயிலைவிட பூசலார் நாயனார் எண்ணத்தின் சிறப்பால் மனதில் கட்டிய கோயிலே ஈசனுக்கு இன்பம் நல்கியது எனலாம். எனவே இறைவன் மன்னனின் கனவில் தோன்றி பூசலார் நாயனாரின் உள்ளமாகிய கோயிலில் தான் நாளை குடியேறப்புகுவதாகவும், ஆகவே இங்கு கோயில் பொருந்தி செயலை நாளை கழித்து வைத்துக் கொள்க என்றும் கூறினார் என்பதை,

“நின்ற ஊர்ப்பூசல் அன்பன் நெடிதுநாள் நினைந்து செய்த

நன்றுநீ டாலயத்து நாளை நாம் புகுவோம் நீ இங்கு

ஒன்றிய செயலை நாளை ஒழிந்துபின் கொள்வாய் என்று

கொன்றைவார் சடையார் தொண்டர் கோயில் கொண்டருளப் போந்தார்” (பூ. நா.பு. 4180)

என்பதைப் பாடல் வரிகள் எடுத்தியம்புகின்றது.

ஆக “நல்ல குறிக்கோளை அடைவதற்குத் தொடர்ந்து முயலும் மனிதனின் செயல்பாடே பிற்காலத்தில் அனைவரும் படிக்கும் வரலாறாக மாறுகிறது என்கிறார் கார்ல் மார்க்ஸ்.” இவரின் கருத்திற்கேற்ப பூசலார் உள்ளத்தில் கோயில் எழுப்பி, அக்கோயிலுக்கு இறைவன் வந்தார் என்பது அறிவியல் கண் கொண்டு பார்ப்பவருக்கு உண்மையா என்ற கேள்வி எழும். அருளோடு இருப்பவருக்;கு உண்மையே என்ற உணர்வு வரும். நம்பிக்கையோடு இருப்பவருக்கு முடியாதது ஒன்றும் இல்லை என்ற தன்னம்பிக்கை மலரும். அதற்கு வரலாறாக அமைவது இருதயாலீஸ்வரர் (மன ஆலய ஈஸ்வரர்) என்ற திருத்தலம் திருநின்றவூரில் அமைக்கப்பட்டுள்ளது சான்றாதாரமாகும். மேலும் சிவபெருமானின் மூலஸ்தானத்திலேயே பூசலார் நாயனாரின் சிலை இருப்பது தனிசிறப்பு. பூசலார் நாயனார் இறைவனை தன் இதயத்தில் வைத்து பூசை செய்து கோயில் கட்டியதால் இதயம் தொடர்பான நோய்களுக்கு இங்கு வழிபட்டால் சிறந்த பலன் கிடைக்குமென்ற நம்பிக்கையும் இன்றளவும் இருப்பது பூசலாரின் குறிக்கோளுக்கு கிடைத்த சாதனையாகும்.

**மனம் சீர் அமைப்பு நெறி**

மனதை ஒருநிலைப்படுத்தி செய்ய வேண்டிய செயலை ஒழுங்குபடுத்தி சிறப்புற செய்யும் நெறியே மனம் சீர் அமைப்பு நெறி எனலாம். எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என இல்லாமல் இப்படித்தான் வாழ வேண்டும் என்ற மனித நிலையின் உச்சமே மனதைச்; சீர்படுத்துதல். இவ்வாறு மனதை ஒழுங்குபடுத்தி செய்யும் செயலைத் திருவள்ளுவர்,

“மனத்துக்கண் மாசுஇலன் ஆதல் அனைத்துஅறன்

ஆகுல நீர பிற”

என வாழ்வதே சிறந்த நெறியாகும் என்கிறார். மனம் செம்மையாக இருப்பதே சிறப்பு மட்டுமே என்பதை திருமூலர்,

“மனமது செம்மையானால் மந்திரஞ் செபி;க்க வேண்டா,

மனமது செம்மையானால் வாயுவை வுயர்த்த வேண்டா,

மனமது செம்மையானால் வாசியை நிறுத்த வேண்டா,

மனமது செம்மையானால் மந்திரஞ் செம்மையாமே”

என்கிறார். மனிதனின் மனம் செம்மையானால் அனைத்தும் சீர்மையாகும். மனதை சீர் அமைக்கும் முதல் நெறி மனதைப் பக்குவமடையச் செய்தலே, அதாவது மனதை பண்படுத்துதல். பண்படுத்திய மனதில் விதைத்த செயலை ஒழுங்குப்படுத்துதல்,முறையாகச் செய்தல் என்ற நிலையில் அமைத்துக் கொள்வது. இப்படி மனதின் ஆசையை மனதிலேயே ஒழுங்குபடுத்தி மனதிலேயே செயலாக்கி, அச்செயலை முறையாக மனதிலேயே பூசலார் செய்வதை,

“சாதனத் தோடு தச்சர் தம்மையும் மனத்தால் தேடி

நாதனுக் கால யஞ்செய் நலம்பெ றுநன்னாட் கொண்டே

ஆதரித் தாக மத்தால் அடிநிலை பாரித் தன்பால்

காதலிங் கங்குற் போதுங் கண்படா தெடுக்க லுற்றார்." (பூ. நா.பு. 4176)

என்ற பாடலடிகளின்வழி முக்கண்ணுடைய சிவபெருமானுக்கு மனதிலே கோயில் எடுக்க எண்ணி தேவையான பொருள்களை மனதிலே தேடி, நன்மை நல்கும் நல்ல நாளில் வேலைக் குறித்துக்கொண்டு இரவும் பகலும் பாராமல் கோயில் பணியை முறையாக செய்வதோடு, கோயில் கலை நுட்பத்திறனுடன் விளங்க வேண்டும் என ஓவிய வேலைப்பாடுகளும் மனதிலேயே செய்த அழகை,

"அடிமுதல் உபானம் ஆதியாகிய படைக ளெல்லாம்

வடிவுறுந் தொழில்கள் முற்ற மனத்தினால் வகுத்து மான

முடிவுறு சிகரந் தானும் முன்னிய முழுத்திற் கொண்டு

நெடிதுநாள் கூடக்கோயில் நிரம்பிட நினைவாற் செய்தார்" (பூ. நா.பு. 4177)

என்ற பாடல்வரிகளின் மூலம் பூசலாரின் மனதை சீர்ப்படுத்தும் நிலையை அறியமுடிகின்றது.

**யோக நெறி**

"யோகக் கலை அல்லது யோகா என்பது உடல், மனம், அறிவு, உணர்வு மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்கும், சமன்பாட்டிற்கும் உதவிடும் கலை ஆகும். யோகா என்னும் கலை வாழ்க்கை அறிவியல் மற்றும் வாழும் கலை ஆகும்." மேலும் இதனை "|யுஜ் என்னும் சமஸ்கிருத சொல்லில் இருந்து வந்த யோகா என்னும் சொல்லுக்கு, தனிப்பட்டவரின் நனவுநிலை அல்லது ஆன்மா, பிரபஞ்ச சக்தியுடன் இணைதல் என்று அர்த்தம். யோகா என்பது 5000 ஆண்டு பழைமை வாய்ந்த உடல் சார்ந்த அறிவு, யோகா என்பதைப் பலர், உடல் வளைதல், திரும்புதல், நீட்டுதல், மூச்சினை எடுத்து விடுதல் என சிக்கலான உடற்பயற்சி என்று நினைக்கக்கூடும். இவையனைத்தும், உள்ளிருக்கும் மனித மனதின் ஆன்மாவின் எல்லையற்ற சக்தியைத் திறந்து திறனை அதிகரிக்கும் ஆழமான அறிவியலைப் பற்றிய மேலோட்டமான கருத்துகள்" என்றும் "யோகா என்பதே தன்னுள் எப்படி வாழ வேண்டுமெனும் வாழ்க்கையின் சாரத்தைப் பொதிந்து வைத்திருக்கும் அறிவியல் ஆகும். ஞானயோகம், ஞான தத்துவ மார்க்கம், பக்தியோகம், பக்தி வழியில் பேரின்பம், கர்ம யோகம், ராஜயோகம் என்பன" என்றும் குறிப்பிடப்படுகின்றது. இவற்றில் பூசலார் நாயனார் பக்தி யோகத்தையும் பக்தி வழியில் பேரின்பம் அடைந்ததை,

"அன்பரும் அமைத்த சிந்தை ஆலயத் தரனார் தம்மை

நன்பெரும் பொழுது சாரத் தாபித்து நலத்தினோடும்

பின்புபூ சனைகளெல்லாம் பெருமையிற் பல நாட்பேணிப்

பொன்புளை மன்று ளாடும் பொற்கழல் நீழல் புக்கார்" (பூ. நா. பு. 4187)

என்ற பாடல் அடிகளின்வழி அறியமுடிகின்றது. இதனை திருமூலர்,

"ஊன் உடம்பு ஆலயம்" என்றும்

"உடம்புளே உத்தமன் கோயில் கொண்டானே"

(திருமந்திரம் 1823,725)

என்றும் குறிப்பிடுவதன் வழி மனதை ஒருநிலைப்படுத்தி யோகநிலையில் ஒன்றை அடைய வேண்டும் என்று நினைத்து அதனை அடைந்து பேரின்பம் கண்டவர் பூசலார் என்றால் அது மிகையாகாது.

**ஈகை நெறி**

மனிதப் பண்பை உயர்த்தும் ஒரு சிறந்த நெறி ஈகை. கொடுத்து உதவும் மனம் படைத்த மனிதனே பக்குவநிலை உடையவன் எனலாம். கை பெற்றதன் பயன் கொடுப்பதற்கே என்பதை உணர வேண்டும். பிறருக்குக் கொடுத்து உதவும் செயல் ஒருவனுக்கு உண்மையான இன்பத்தை கொடுக்கும். நம்மிடம் வருபவருக்கு இல்லை எனக்கூறாது கொடுக்க வேண்டும். தானத்தில் சிறந்தது அன்னதானம் என்றும் கண்தானம் என்றும் கூறுவர். இறந்தபின் கண்தானம் செய்வது இன்றைய தாரக மந்திரம். ஆனால் கண்ணப்பநாயனார் சிவனின் கண்ணில் இரத்தம் வர தன்னுடைய கண்ணையே தோண்டிக் கொடுத்த கொடைவள்ளல். இப்படி தன்னலம் பராது பிறர் நலம் பேணும் உள்ளம் கொண்டவர்களாக சைவ நாயன்மார்கள் விளங்கியுள்ளனர். கொடுப்பதன் பயனை திருவள்ளுவர்,

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல

ஊதியம் இல்லை உயிர்க்கு"

என்று கூறுகிறார். அவ்வகையில் சிவபெருமானுக்கும் அவரின் அடியவரான அன்பர்களுக்கும் கொடுப்பதற்காகவே பொருள் தேடிய பெருமைக்குரியவராக பூசலார் திகழ்ந்ததை,

"அடுப்பது சிவன்பால் அன்பர்க் காம்பணி செய்தல் என்றே

கொடுப்பதெவ வகையுந்தேடி அவர்கொளக் கொடுத்துங் ...." (பூ. நா. பு. 4174)

என்ற பாடல்வரி உணர்த்தி நிற்கின்றது. தனக்கென வாழாப் பிறர்க்குரியவராக வாழ்ந்து காட்டியவர் பூசலார் நாயனார்.

உறுதிப்பாட்டு நெறி

ஊக்கம் என்னும் உறுதிப்பாடு ஆக்கத்தை நல்கும். இதனை திருவள்ளுவர்

“ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா ஊக்கம் உடையான் உழை ”

என்ற குறலுக்கு ஏற்ப ஊக்கமுடைய உறுதிப்பாடு ஒவ்வொரு மனிதரிடமும் அவசியம் தேவை. எந்த நிலையிலும் ஒரு மனிதனுக்கு ஊக்கமும் உறுதியும் இருந்தால் வாழ்க்கை பற்றிய அச்சமும் எது நடக்குமோ என்ன ஆகுமோ என்ற மனகுழப்பமும் இருக்காது. ஊக்கமுடைய உறுதிப்பாட்டால் நம்பிக்கையும் விடாமுயற்சியும் வரும். இதனால் வாழ்வைச் செம்மையுற வாழ முடியும். ஆனால் இன்றைய கால கட்டத்தில் ஊக்கமுடைமையோ உறுதிப்பாடோ மிகவும் குறைந்து விட்டது. உண்ணும் உணவு முதல் உறங்கும் உறக்கம் வரை அனைத்தும் எளிமையாகவும் சுகமாகவும் கிடைக்கவேண்டும். வேலையைப் பார்த்து பயப்;படுதல், வறுமை நிலைக்கு அச்சுதல், அனைத்தும் இருந்த இடத்திலேயே இலவசமாகக் கிடைக்காத என்ற ஏக்கம், வாழ்க்கையை நினைத்து மன அழுத்தம் ஆகியன இன்றைய மனிதர்களிடம் பரவலாக காணப்படும் உண்மை. ஆனால் பூசலார் நாயனார் கோயில் கட்ட வேண்டும் என்ற ஆசை. ஆனால் அதற்குரிய நிதி இல்லை. எட்டாத பழத்திற்கு கொட்டாவி விட வேண்டாம் என்று எண்ணவில்லை. ஆசையை அடைய முயற்சித்தார். முயற்சியை எண்ணத்தால் செயலாக்கினார்

**அருள் நெறி**

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம் என்பது போல உண்மை உள்ளம் கொண்டவரிடமும் இறைவனைக் காணலாம் என்பதற்குப் பூசலாரின் அன்பு நெறியே சான்றாகும். பூசலாரின் அன்பு ஈசனின் அருளாக மலர்ந்தது. மேலும் உண்மையான உள்ளமும் இறை சிந்தனையும் உடையவரை உலகம் மதிக்கும் என்பதற்கு சான்றாக,

“புரையுறு சிந்தை அன்பர்பெருமை என் றவரைப் போற்றி

விரைசெறி மாலை தாழ நிமிசை வீழ்ந்து தாழ்ந்து”

என்பதன்வழி ஒரு நாட்டை ஆட்சி செய்யும் மன்னன் பக்தியுள்ளம் கொண்டவருக்கு அடி வணங்கினான். மன்னன் பூசலாரின் அடி வணங்கி பூசலாரின் பெருமையையும் பக்தி நெறியையும் உலகறிய செய்வதே இறைவனின் அருள்நெறி எனலாம்.

**தொகுப்புரை**

ஆக பூசலாரின் தன்னம்பிக்கையின் வழியையும் யோக நிலையையும் ஆராய்ந்ததோடு உள்ளத் தூய்மையுடையவரிடம் இறைவன் அடைக்கலம் புகுவான் என்பதுபோல உள்ளத்தூய்மையும் ஊக்கமும், தன்னம்பிக்கையும், விடாமுயற்சியோடு கூடிய யோகநிலையும் ஒரு மனிதனின் வெற்றிக்கு வழிவகுப்பதோடு அம்மனிதனைச் சாதனையாளனாக வரலாறு படைக்கச்செய்யும் என்பதற்கு பூசலார் நாயனார்ப்புராணம் சான்று பகர்கிறது என்பது உண்மை. வாழ்க தன்னம்பிக்கையுடன் கூடிய பக்தி நெறி வளர்க யோக நிலை.